45

# ADDRESS TO WORSHIPPERS OF SIVA.

FIRST EDITION.—5,000 Copies.

சிவபத்தருக்கு எழுதிய

# நேச நிருபம்.



MADRAS:

PRINTED FOR THE RELIGIOUS TRACT AND BOOK SOCIETY,
By H. W. Laurie, Christian Knowledge Society's Press.
18, Church Street, Vepery.

1870.

No. 115. 3 *Pie.* ௩ பை.

# வேதவாக்கியங்கள்.

அறியாமையுள்ள காலங்களைப் பராபரன் காணாதவர்போல் இருந்தார்; இப்பொழுது மனந்திரும்ப வேண்டுமென்று எவ்விடத்திலுமுள்ள மனிதர் யாவருக்குங் கட்டளையிடுகிறார். மேலும் ஒரு நாளைக் குறித்தார்; அதிலே அவர் தாம் நியமித்த ஒருவனைக் கொண்டு பூச்சக்கரத்திலுள்ள யாவருக்கும் நியாயத் தீர்ப்புக் கொடுப்பார்; அவனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே, அவர் அதின் நிச்சயத்தை எல்லாருக்கும் விளங்கப்பண்ணினார்.

அப்போ. 17. 30, 31.

பிரபுக்களையும், இரட்சிப்பில்லா மனுப்புத்திரனையும் நம்பாதிருங்கள். அவனுடைய ஆவி புறப்படும், தன் மண்ணுக்குத் திரும்புகிறான்; அந்நாளிலே அவன் யோசனைகள் அழியும். யாக்கோபின் பராபரனைத் தன் துணையாகக் கொண்டிருந்து, வானத்தையும், பூமியையும், சமுத்திரத்தையும், அவைகளிலுள்ளவை எல்லாவற்றையும் உண்டாக்கின தன் பராபரனாகிய கர்த்தரின்மேல் தன் நம்பிக்கையை வைக்கிறவன் பாக்கியவான்.

சங்கீதம், 146. 3—5.

# ADDRESS TO WORSHIPPERS OF SIVA.

சிவபத்தருக்கு எழுதிய

# நேச நிருபம்.

## முகவுரை.

பிரியமுள்ள சிவபத்தர்களே!

அன்போடே நான் உங்களுக்கு ஒரு நிருபம் எழுதுகிறேன். நீங்கள் அதை அன்போடே கவனித்து வாசித்துக்கொண்டால் பாக்கியத்தின்மேற் பாக்கியத்தை அடைவீர்கள் என்பதற்குச் சந்தேகமில்லை.

நீங்கள் தேவனைப்பற்றி நினைப்புடையவர்களாய், மோக்ஷம் வேண்டுமென்ற ஆசையுடையவர்களாய் இருக்கிறீர்களென்பது மெச்சிக்கொள்ளப்படத்தக்க காரியம்; அந்த விருப்பம் நல்ல விருப்பந்தான். இந்தப் பூலோகமும், இந்தப் பூலோகத்திலுள்ளவைகளும் அழிந்துபோ

கத்தக்கதாயிருப்பதுபோல, மேலோகமாகிய மோக்ஷலோகமும் அழிந்துபோகாதென்பது உண்மை. ஆகையால் மோக்ஷலோகத்துக்கு வழி எந்த வழி என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும்படி, உங்கள் புத்திக்கிசைய நியாயத்தோடு காட்டுவதே என் நிருபத்தின் நோக்கமென்று அறிவீர்களாக.

நீங்கள் சில சமயங்களிற் சொல்லிக்கொள்ளுகிறபடிக்கும், நீங்கள் கைக்கொள்ளுகிற உங்கள் சமயாசாரங்களை நன்றாய் அறிந்து தெளிந்த அநேக ஞானிகள் வெகுவாய்ச் சொல்லியிருந்தபடிக்கும், காரணகர்த்தாவாகிய ஒரே தேவனையே வணங்கி, அவர் அருளிய வேதம் ஒன்றையே கைக்கொண்டு நடக்கப்பாராமல், உங்கள் ஞானிகளால் கைவிடப்பட்டதும், மனிதர் ஏற்படுத்தினதுமாகத் துலங்குகிற சமயாசாரத்தைக் கைக்கொண்டு, அதிற் சொல்லப்பட்டிருக்கிற பேர்போனவர்களையும் தேவர்களாகப் பாவித்து வணங்குவதினால் மோக்ஷம் கிடைக்குமென்று நம்பியிருக்கிறது, "அவலை நினைத்து உரலில் குத்துகிறதுபோலிருக்கிறதே" ஒழிய வேறல்ல. கானலை நீரென்றெண்ணிப் போவது அதிக வருத்தத்துக்கிடமே.

அப்படியே ஒருவர்,

"கானலைநீரென்றெண்ணிக் கடுவெளிதிரியும்மான்போல்
இனமிலிலவங்காயைக் கனியெனுங்கிள்ளைபோல
தேனுறுதண்டின்கூட்டைத் தீண்டியவாறுபோல
யானுனையரசென்றெண்ணி நாளவம்போக்கினேனே

என்றும்,

சங்கராசாரியார்.

உலகிலேபிறந்துமுன்னே ரோதியகலைகளெல்லாம்
நிலையதாஞ்சோதிதன்னை நிசமதாய்ச்சொன்னதில்லை
பலபலபேதமாகப் பங்கமாய்க்கூறுசெய்தே
அலகைபோற்பொய்யைப்பேசியருநரகழுந்திப்போனார்"

என்றும் சொல்லியபடி, புராணங் கட்டினவர்கள் நரகத்துக்குரியவர்களாய்ப் போனார்கள் என்று தோன்றுகிறதேயொழிய, மோக்ஷத்துக்குப் போகவுமில்லை, மோக்ஷவழியைக் காட்டவுமில்லை.

எண்ணிக்கையுடைத்தான சிநேகிதர்களே! நீங்களோ நாளுக்குநாள் அறிவிலும் நாகரீகத்திலும் தேறிவருகிறீர்களென்று நான் கண்டு, சந்தோஷப்பட்டு, மார்க்ககாரியத்திலும் தேறி உண்மையான மார்க்கத்தை அங்கிகரித்து, உண்மையற்றவைகளைத் தள்ளிப்போடக் கேட்கி

றேன். அப்படிச் செய்வது உங்களுக்கும் உங்கள் முன்னோர்களுக்கும் புகழ்ச்சியாம்.

"தம்மிற்றம்மக்கள் அறிவுடைமைமாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது"

என்று திருவள்ளுவருங்கூடச் சொன்னாரே.

மூக்கறையன், தன்னைப்போல மற்றவர்களும் மூக்கறையராகவேண்டும் என்று, பொறாமையினாலே இல்லாததையும் பொல்லாததையும் சொன்னானென்பதுபோலச் சொல்லாமல், சிவசமயத்தினுள்ள காரியங்களையும், கிறிஸ்துவேதத்திலுள்ள காரியங்களையும் எடுத்துக் காட்டுகிறேன்.

நீங்கள் உங்களைப் படைத்துக் காப்பாற்றுகிற தேவனைச் சேரவும், அவர் உங்கள் தலையில் மகிமையுள்ள கிரீடத்தைச் சூட்டவும் வேண்டுமென்றே விருப்பமுடையவனாய் இந்தப் புத்தகத்திற் சில காரியங்களைக் குறிப்பாக எழுதுகிறேன்.

"எண்சாணுடம்புக்குஞ் சிரசே பிரதானம்" என்பதின்படி, ஒரு மார்க்கத்துக்கு அம்மார்க்கத்திற் சொல்லப்படுகிற தெய்வமே பிரதானம். இந்த முறைப்படி சிவசமயத்திற் காட்டப்படுகிற தெய்வம் சிவனே. ஆகையால்,

# முதலாவது.

## சிவனைப்பற்றிச் சொல்லப்படுகிற விருத்தாந்தங்களைப் பார்ப்போம்.

"சிற்றிடைக்கொல்கி, நுடங்குந்திருவயிற்றுளொருத்தி
பெற்றெடுக்குந்திறப்பிள்ளைகள், மூவர்அம்மூவருக்குங்
கற்றிடச்சொன்ன தொழிலொருமூன்று; கடைசியிலே
செத்திடச்சொன்ன பிள்ளைக்கவளம்மை தேவியுமே"

என்று கண்ட பாடலின்படி, சிவனுடைய தாயாகிய சத்தியென்பவள் சிவனோடே இரண்டு குமாரரைப் பெற்றதாகவும், அப்பிள்ளைகள் மூவரும் வெவ்வேறான மூன்று தொழிலையுடையவர்களாய் இருந்ததாகவும் காணப்படுகிறது.

மேலும், சிவனுக்குப் பார்வதி, கங்கை என்ற இரண்டு பெண்சாதிகளும், பிள்ளையார், சுப்பிரமணியன் என்ற இரண்டு விசேஷித்த பிள்ளைகளும் இருந்ததாகவும் சொல்லப்பட்டு வழங்குகிறது.

முக்கியமாய்ச் சிவன் சிவபுரமென்ற ஊரில் பார்வதியோடே குடியிருந்ததாகவும், அவ்வூரி

லே அநேக வேசிகளும் குடியிருந்ததினல், சில வேளே அந்தப்புரங்களிலே நடமாடின சிவனை ப்பற்றிப் பார்வதி அடிக்கடி சமூசயங்கொண் டதாகவும், ஒருவிசை சிவன் வீட்டுக்குள் வாரா தபடி வாசலை அடைத்துப்போட்டதால், சிவன் வாசலுக்கப்புறம் நின்று ஆயாசப்பட்டதாக வும், ஒருகாலத்தில் சிவன் பார்வதியோடே சொக்கட்டான் ஆடினதில் தோற்றுப்போக, தான் தோற்றுப்போகவில்லையென்று மாறி மறு த்துச் சொன்னதாகவும், ஒருவிசை பஸ்மாசூர னுக்குத் தொட்டவிடம் எரிந்துபோகும்படி வரங்கொடுக்க, அவன் தீட்டின மாத்திற் கூர் மைபார்த்ததுபோலும், வளர்த்தகடா மார்பிற் பாயவந்ததுபோலும் சிவன்மேலே கைபோடப் போக, சிவன் ஓடி ஒளித்ததாகவும் சொல்லப் படுகிறது.

மேலும், சிவன் பிரமாவின் தலையைக் கிள் ளின பாதகத்தினுல் தோஷம் சம்பவித்து, மதி மயங்கி, சுடுகாட்டிலே போய்க் கிடந்து, அங் குள்ள சாம்பலையும் எலும்புகளையும் அணிந்து, ஆவேசங்கொண்ட ஆட்போல ஆடிக் குதித்த தாகவும், இதினுல் சுடலையாடியென்றும், நீற ணிந்தோனென்றும், பூதநாதனென்றும், பேயோ

டாடியென்றும், பித்தனென்றும், இப்படிச் சிவனுக்குப் பலபேர் வழங்குகிறது.

பின்னும் சிவன், சில சமயத்திற் பிச்சையெடுத்ததாகவும், பிச்சைக்காரர் வேஷமாய் அநேக துரிச்சைகளை அநியாயமாய் நடப்பித்ததாகவும் சொல்லப்படுகிறவைகளையெல்லாம் சொல்லப்போனால் வெட்கமும் துக்கமுமாம். அவைகளைக் கேட்பது யோக்கியாளுக்கும் பிரியமாயிராது. ஆகையால் அவைகளைச் சொல்லமாட்டேன்.

ஒருவிசை சிவன் தனக்குத்தானே தீர்ப்புச் சொல்லுகிற விதமாய்ப் பார்வதியிடத்தில் ஒரு வசனம் சொன்னதுண்டு. அதாவது: ஓ பார்வதியே! ஆழமான நரகத்தில் விழுகிறவன் யாரென்றால், மற்றவர்களுடைய பொருளையும், அவர்களுடைய பெண்சாதிகளையும் தன் வசப்படுத்தும்படியாகத் தித்திப்பான வசனத்தோடே கூடின சுபாவத்தையுடையவனே என்பதே. சிவனைப்பற்றி முக்கியமாய்ச் சொல்லப்படுகிற சரித்திர விசேஷங்கள் இவைகளே.

மேற்கண்டவைகளை அறிந்துகொள்ளுகிற என் நண்பர்களே! நான் சிவனைப்பற்றி எடுத்

துக்காட்டினதெல்லாம் உங்கள் சமயாசாரங் களில் இருப்பதேயல்லாமல் வேறல்ல. சிவ ஊைப்பற்றிச் சொல்லப்பட்டவைகளில் சில தைக் குறைத்தும், சிலதைச் சொல்லாமலும் விட்டுவிட்டேனேதவிர ஒன்றையாவது கூட் டவில்லை. ஆகையால் சிவன் இன்னன் என் பதை நீங்களே நிதானித்துத் தீர்ப்புச்சொல் லுங்கள்.

சர்வ வல்லமையும், சர்வ வியாபகமும், சர்வ ஞானமும், மகா பரிசுத்தமும், அளவில்லாத நீதியும், இரக்கமும், அன்பும் நிறைந்த சாக்ஷாத் பகவானுகிய கடவுள் சிவன்தானே, அல்ல வோ? கடவுளுக்குரிய இலட்சணம் சிவனுக்கு உண்டோ இல்லையோ? அல்லது மனிதர்க்குரிய இலக்ஷணந்தான் சரியாய் சிவனுக்கு இருக்கிற தேதவிர வேறல்லவோ என்று கவனித்துப் பாருங்கள்.

இருட்டானவேளையிலே ஒரு மனுஷன் கறுப் பான கட்டி ஒன்றைத் தங்கமென்று கொண்டு வந்து கொடுத்துப்போனல், அது தங்கமோ அல்லவோ என்று உடனே தீபமேற்றிப் பார்ப் பீர்களே. விடிந்தவுடன், உரைகல்லில் அதை உரைத்து, அது இன்னதென்று அறியப் பிரயா

சப்படுவீர்களே. அப்படியே உங்கள் புத்தியின் கண்ணாலும், உங்கள் கூர்மையுள்ள சிந்தையாலும், சிவனைத் தேவனோ, அல்லவோ என்று நிதானியுங்கள்.

சும்மாயிருக்கிற மனிதனைத் துறட்டிபோட்டி மூத்தமாதிரியாய் இருக்கிறதொழிய வேறல்ல. சிவன் தன்னைத் தேவனென்றும், யாவரும் தன்னை வணங்கவேண்டுமென்றும் சிவன் தன் வாயினாலே விசேஷித்துச்சொன்ன இடம் எங்கே? அதைக் காட்டுவீர்களா? அதற்கு இடமில்லையே. புராணங்களைக் கட்டினவர்கள் சிவனைத் தேவனென்று வைத்தது எதுபோலிருக்கிறதென்றால், இதற்கு முன்னாட்களில் நடந்ததாகச் சொல்லுகிற ஒரு திருஷ்டாந்தத்தைக்கொண்டு சொல்லுகிறேன்.

ஒரு தேசத்தில் ஒரு இராஜன் இருந்ததாகவும், அந்த இராஜன் மெத்த அறிவுள்ளவனாய்க் கலியாணம் வேண்டாமென்று தனிமையாயிருந்து, தன் குடிகளுக்கு அநேக நீதிநெறிகளைப் பிரசித்தம்பண்ண, அவர்கள் அதை ஏற்றுக்கொள்ளாமையால் விசனத்தோடே வேறே இடத்துக்குப் போய்விட்டதாகவும், அந்தக் குடிகளோ இராஜனை விரும்பித் தேடாமல் வெறுத்து, தங்க

ளுக்குத்தானே இராஜபட்டம் வேண்டுமென்று சல்லியஞ்செய்தும் முடியாமையால், பட்டத்து யானையைக் கொண்டுவந்து, அது யாரைத் தூக்கிக்கொண்டுவருமோ அவனையே இராஜனாக்க வேண்டுமென்று தீர்மானித்து, அந்தப்படி யானையைத் தெருவில் விட்டதாகவும், அது ஒரு பிள்ளையைத் தூக்கிக்கொண்டுவர, அந்தப் பிள்ளைக்குப் பட்டஞ்சூட்டினதாகவும் சொல்லப்படுகிற சங்கதிக்கொப்பாய், புராணங் கட்டினவர்களும் சர்வ சம்பூரண கடவுளை அறியாமலும், அவரை ஆவியினாலும் உண்மையினாலும் தேடிப் பிடிக்கவேண்டுமென்று நினையாமலும், பல கீர்த்தனங்களில் பேர்போனவர்களையெல்லாம் சமயத்துக்குத்தக்கதாகத் தெய்வமாகக் காட்டி, அவர்கள் தங்கள் கெட்ட இச்சை போனபடி தேவனும் இப்பேர்ப்பட்டவராய் இருப்பாரென்று அபத்தமான காரியங்களை அறிவாளிகள் பரியாசம்பண்ணத்தக்கதாக உண்டுபண்ணிப்போட்டார்கள் என்று விளங்குகிறது. அப்படியே ஒருவர்:

"அண்ணலாம் பரமசோதி
யற்புத மறியாதாலே
கண்ணிலே கண்டதெல்லாம்
கதிதருங் கடவுளென்று

மண்ணுளோர் வணங்குகின்ருர்
வரன்முறைப் படியிதென்ன
எண்ணியே நடந்துமோட்ச
மிழந்தெரி நரகில்வீழ்வார்

என்றும்,

ஒருவர்.

அரியுமல்ல அயனுமல்ல அரனுமல்ல அப்புறம்
கருமைசெம்மை வெண்மையுங் கடந்துநின்ற காரணம்
பெரியதல்ல சிறியதல்ல பெண்ணுமாணு மல்லவே
துரியமுங் கடந்துநின்ற தூரதூர தூரமே

என்றும்,

பின்னுமவர்.

கழுதைகட்டி ஓமஞ்செய்தால் கழுதையன்னமாகுமோ
பழுதுசற்றமாந்தர்கேளும் பரமசிவன் கர்த்தனே"

என்கிருர்.

மேலும், தற்காலத்தில் உங்களுக்குள் இருக்கிற யோக்கியாளும் நடப்பித்திராத பஞ்சமா பாவங்களைச் சிவன் செய்திருக்க, சிவனைத் தேவன் என்பது சரியோ? அது சரியல்ல. புராணங்களில் அப்படிப்பட்ட விஷயங்களைச் சேர்த்திருப்பது புராணத்துக்கு அலங்காரக் கேடாகவே இருக்கிறது.

சிலர், திருவிளையாட்டாக அப்படிச் சிவன் நடப்பித்தது என்பார்கள்; அது எப்படி? இந்த மூகாந்தரம் புராணங்களில் சொல்லப்படாமல்,

நீங்களே சொல்லிக்கொள்ளுகிற போக்காயிருக்கிறதேயன்றி வேறல்ல. தாயாயிருந்தாலும், பிள்ளையாயிருந்தாலும் கண்ணில் கண்ட உண்மையையும், காதில் கேட்ட நியாயத்தையும் அல்லவோ சொல்லவேண்டும்? பாரபட்சமாய்ச் சொல்லலாமா? "தான் பிடித்த முசலுக்கு மூன்றேகால்" உண்டென்றால் ஒப்புமா? சிவன் தன் இயல்பான சுபாவப்படி அநியாயமாய் நடப்பித்த அசுத்த காரியங்களை விளையாட்டென்பது சரியல்ல. சுவாமியானால் விளையாடுகிறதற்கு விளையாட்டுப் பிள்ளையல்லவே; அப்படிப் போக்குச்சொல்லுகிறவர்களே விளையாட்டுப் பிள்ளைகள். சிவன் தேவனாயிருப்பது உண்மையானால், திருவிளையாட்டாகப் பாவம் செய்ததும் உண்டென்பது பொய்யே. சிவன் திருவிளையாட்டாகப் பாவஞ்செய்தானென்பது உண்மையானால், சிவன் தேவனல்ல என்பதும் உண்மை.

பிரியமுள்ளவர்களே! இப்போது நமக்கு மேற்பட்ட இராஜா நமக்கடுத்தவர்களைக் கொன்று கெட்ட காரியங்களை நடப்பித்தால் நாம் சகிப்போமா? அது நீதியென்றும், விளையாட்டென்றும் சொல்லிச் சந்தோஷப்படுவோமா? மாட்

டோமே. "குருணிப்பால் கறந்தாலும் பசு கூ ளையைப் பிடுங்கச் சம்மதிப்பாருண்டா?" இரா ஜநீதி தெய்வநீதி உண்டென்று நாம் வழக்க மாய்ச் சொல்லுகிறபடி, இராஜாவாவது தெய்வ மாவது நமக்கு முன்மாதிரி காட்டி நீதி செய்ய வேண்டியதல்லவோ கடமை. சிவன் தெய்வ மேயானல், அநியாய பாவங்களைச் செய்து ஆகாத மாதிரிகளைக் காட்டுவது எப்படி?

தெய்வம் பாவஞ்செய்தாலும் தெய்வத்துக் கொன்றுமில்லை, குற்றமுமில்லை; மனுஷர்தான் பாவஞ்செய்யக் கூடாதென்பார் சிலர். மாமிக்கு ஒரு நியாயமும், மருமகளுக்கு ஒரு நியாய மும் உண்டோ? "மாமியார் உடைத்தால் மண்சட்டி, மருமகள் உடைத்தால் பொன்சட்டி" என் பதுபோலிருக்கிறதே. பாஷாணத்தை விற்கிற கடைக்காரன் பாஷாணத்தைத் தின்பது கூடாத காரியம்போல, கற்பனைகளைக் கொடுக்கிற தேவனும் கற்பனைக்கு விரோதமாய் நடக்கக்கூடாது. சிவன் கற்பனைக்கு விரோதமாய் நடந்தது மெய் யானல் அது மோசமான காரியம்.

இப்போது சிவனைப்பற்றியுள்ள நிதானத்தை உண்மையாய்ச் சொல்லுகிறேன். சிவன் பெண் சாதி பிள்ளைகளோடே சிலநாள் குடியிருந்த

தையும், இவனுடைய குணாகுணங்களையும் பார்க்கும்போதும், சிவனோடு சேர்ந்த விஷ்ணு ஒரு சமயத்தில்,

"சூரியகுலத்துக்கெல்லாம் துரையெனச்சிலநாள்வாழ்ந்தேன்
வீரியமுடையோரெல்லாம் மெச்சமாவீரனானேன்
பாரினில்அரக்கன்செய்த பாதகத்தாலேஇப்போ
காரியமறியாவஞ்சக் கசடர்போலாயினேனே"

என்று சொல்லிய புலம்பலைச் சிந்திக்கும்போதும், சிவனும் முன்னாளிலிருந்த ஒரு வீரசூரனென்றே சொல்லவேண்டியது. அப்படியே வாணாசூரனென்ற இராக்ஷதன் அதிக பராக்கிரமனாயிருந்ததினாலே சிவன் அவனுக்குள் அடங்கி அவனுடைய வாசல் காக்கிற தூதனாயிருந்தான் என்று சொல்லப்படுகிறதுண்டு. ஆகையால் சிநேகிதர்களே! நீங்கள் இதுவரையும் பிடித்துக்கொண்ட பிடியை விட்டுவிடுங்கள்; பாவத்தன்மையும் வீரகுணமுமுடைய ஒருவனையும் தேவன் என்று நம்பாதேயுங்கள்.

அப்படியே ஒரு ஞானி.

"சிவனைத்தேவனென்று தெளிந்துணர்ஞானிகாள்கேள்
சீவர்க்குமட்டுமுண்டு தேவர்க்குமட்டுமில்லை
சாவதும்பிறப்பதான தனித்துன்பம்தேவர்க்கில்லை
பாவஞ்செய்சிவன்றானும் பராபரனாகுமோசொல்"

என்று பாடியதைக் கவனித்துக்கொள்ளுங்கள்.

இதுவரையும் சிவன் இன்னானென்றும், சிவனுடைய அந்தஸ்து இன்னதென்றும் ஒருவாறு பார்த்தீர்களே. மெய்யான தேவனைப்பற்றி அறியவேண்டாமோ? அவனைப்பற்றிச் சொல்லுகிறதற்கு நாம் எம்மாத்திரம்? ஆகிலும் அவர் அருளிய பரிசுத்த வேதத்தில் காட்டியிருக்கிறபடி சிந்தித்துக்கொள்வோம். மெய்யான தேவனாகிய அவருக்கு யேகோவா என்று பேர்; அதற்கு அர்த்தம் எப்போதும் இருக்கிறவர் என்பது. அவர் அநாதியாயிருந்தார்; இப்போதும் இருக்கிறார்; இனிமேலும் என்றைக்கும் இருப்பார். ஆதலால் அவர் யேகோவா என்னப்படுகிறார். அவர் ஒன்றான பரப்பொருள்; சூரியனிலும் சில கறுப்புகள் காணப்படும்; அவரிலோ எவ்வளவும் பாவமான அசுத்த கறுப்புகளில்லை. நெருப்பில் புழுப்பற்றாததுபோல, அவரில் பாவம் அண்டாது. அவருக்குப் பூவஞ்செய்ய வேண்டிய அகத்தியமுமில்லை. எல்லாம் அவருடைய சிருஷ்டிகளே. அவர் கொடுக்கவே நாம் பெற்றிருக்கிறோம். அவருக்கு ரூபமில்லை; அவர் எங்கும் நிறைந்தவர்; சர்வஞானர், சர்வவல்லர், மாறாதார், மகா பரிசுத்தர், அளவில்லாதார், நீதி இரக்கமுள்ளோர், உண்மை சத்திய

முடையவர். அந்த ஒன்றான தேவன் பிதா, குமாரன், பரிசுத்தஆவியாகிய திரியேக தேவனாயிருக்கிறார். அம்மூவரில் ஒருவராகிய குமாரனே பூலோகத்துக்கு வந்து, மனுஷாவதாரமெடுத்து, இயேசு என்னும் இரட்சகராக வெளிப்பட்டார். இவர்தான் பாவத்தை நீக்கவந்த பாவநாசரும், மோட்சவழி காட்டிய சற்குருவுமானவர். இந்தச் சற்குருவே உங்கள் முன்னோரால் தேடப்பட்டவர்.

"சற்குருவையறியாம லுலகிலேதான்
சண்டாளர்கல்லுகளைத் தெய்வமென்று
பொய்க்குருக்கள்சொன்னபுத்தி தன்னைக்கேட்டுப்
பூசைசெய்துகல்லுகளைப் போற்றிசெய்வார்
சொற்குருக்கள்தங்களுட சொல்லைக்கேட்டால்
சொர்க்கமுண்டோ நரகமல்லால் சொல்லும்போது
சற்குருவையறிந்தவருக் குடனேமோட்சம்
சார்வதென்றேமுன்னோர்கள் சாற்றினரே"

என்று சங்கராசாரியாரும், பின்னும் அநேகரும் சொல்லியிருக்கிறார்களே.

ஆகையால் ஞானிகளின் பின்வரும் தோன்றின புத்திமான்களே! திரியேக தேவனாகிய மகா பரிசுத்தருக்கு தப்பானதொன்றுமில்லை என்றறியுங்கள். அவர் ஒன்றிலும் அடங்காதவராயிருப்பதால் விக்கிரகங்களுக்குள் அடங்

குவாரென்பது ஞானமல்ல. சிருஷ்டிக்கப்பட்டிருக்கிற பொருட்களைப்பார்த்து நமஸ்கரிக்கிறதும் தேவனுக்கு ஏலாதகாரியம்; விக்கிரகத்தில் ஒன்றுமில்லை.

"அண்டரண்டங்கடந்துநின்றசோதிதானும்
அவனிதனிலுடைந்தகல்லிலமருவாரோ
எண்டிசையுமெவ்வுயிருமானசோதி
இனமரங்கல்லுகளிலிருப்பாரோதான்
தொண்டர்களேஉங்களுக்கேனிந்தவார்த்தை
சொன்னவர்க்கும்கேட்டவர்க்கும்சொர்க்கமில்லை
மண்டலத்திற்சற்குருவைவணங்கிநின்றால்
மாறுதபெருவாழ்வுவாழுவீரே."

இப்படியே அநேக ஞானிகள் விக்கிரக வணக்கம் வீணெனக் காட்டியிருக்கிறார்கள்.

ஆகையால் சிவசமயத்தார்களே! மெய்யான கடவுளை நாடி, பாவவழியை வெறுத்து, புண்ணிய வழியைத் தேடிக்கொள்ளுங்கள். அதைப்பற்றி இனிச் சொல்லுகிறேன்; சந்தோஷமாய்க் கேட்பீர்களாக.

# இரண்டாவது.

## சிவமார்க்கமென்று நீங்கள் சொல்லுகிற மார்க்கத்தைப்பற்றிப் பார்ப்போம்.

இதில் ஒரு விசேஷமிருக்கிறது; சிவனுக்கும் சிவமார்க்கம் என்று சொல்லப்படுகிற மார்க்கத்துக்கும் யாதொரு ஒட்டு உறவு இல்லையென்பதே. எப்படியென்றால், கிறிஸ்துமார்க்கத்தில் தெளிவாய்க் காண்கிறபடி தேவன் இன்னின்னாரிடத்தில் இப்படிச் சொன்னாரென்றும், அசரீர வாக்காய் அப்படிச் சொன்னாரென்றும், தமது பத்தர்களைக்கொண்டு ஆவியின் மூலமாய்த் தமது இலட்சணங்களைக் குறித்தும் தமது சித்தத்தைக் குறித்தும், மனிதர் நடக்கவேண்டிய விதிகளைக் குறித்தும் நேராக வெளிப்படுத்தினார் என்றும் சொல்லப்பட்டிருக்கிற விதம்போலச் சிவன் தன்னைப்பற்றியாவது, மனிதர் நடக்க வேண்டிய நெறிகளைக்குறித்தாவது, மோட்ச நரகங்களைக்குறித்தாவது, ரூபுரூபாயாவது, மற்றவர்கள் மூலமாயாவது சொல்லிக்காட்டினது

உண்டோ? வேதபுராணங்களை எழுதிக்கொடுத்தது உண்டோ? அப்படியில்லை. சிவன் அப்படி நடப்பித்ததாகவும், சொன்னதாகவும் உண்டென்று ஒருவரும் துணிந்து சொல்ல ஏதுவில்லை. ஆகையால் சிவன் வேறே, சிவமார்க்கம் வேறே.

இப்போது நீங்கள் அநுசரிக்கிற சிவமார்க்கத்தில் உள்ள ஒவ்வொன்றையும் எடுத்துப் பேசிக்கொள்ளாமல், பாவநிவாரணத்துக்கும், புண்ணியம் வருவதற்கும், முத்திமோட்சம் கிடைப்பதற்கும் என்று குறிப்பிக்கப்பட்டிருக்கிற சில முக்கியமானவைகளைப் பார்க்கவேண்டும். யானையின் பெலத்தை அறிந்து அதினண்டை போகவேண்டியதுபோலும், தீயின் தன்மையை அறிந்து அதைக் கையாடுவதுபோலும், தண்ணீரின் ஆழத்தை அறிந்து அதில் இறங்கவேண்டியதுபோலும், பாவநிவாரண புண்ணியத்திற்கென்று சிவசமயத்தில் காட்டப்படுகிற சில முறைகளை அறியுமுன், பாவம் இன்னதென்பதைப்பற்றிக் கிறிஸ்துமார்க்கப் போதனைப்படி அறிவிக்கிறேன் கேளுங்கள்.

பாவமாவதென்னவெனில், கடவுளுக்குக் கீழ்ப்படியாதிருப்பதே பாவமாம். தேவன் இவ்வு

லகத்திலுள்ள அனைவருக்கும் அரசனாயிருப்பதால், தமது இலட்சண சித்தத்திற்கிசையப் பரிசுத்த பிரமாணங்களைக் கொடுத்திருக்கிறார். அந்தப் பிரமாணங்களில் எதையாகிலும் மீறி நடப்போமேயானால், அதுவே பாவமாம். மனிதர்கள் மனோவாக்குக் காயமாகிய மூன்றினாலும் பல பாவங்களைச் செய்கிறார்கள்.

கடவுள் அருளிய பிரமாணங்களில் முதன்மையானது முழு இருதயத்தினாலும், கூடியவரையில் அவரிடத்தில் அன்புகூரவேண்டியதென்பதே. மனிதர்கள் அவரிடத்தில் அன்புகூராத ஒவ்வொரு நிமிஷமும் பாவத்துக்கு ஏதுவானது. மனிதர்கள் பூமியில் பிறந்தது முதல் அவர்கள் உயிரோடிருக்கிறவரையிலும் ஒரு நாழிகையாவது தங்கள் மனப்பூர்வமாய் அவரிடத்தில் அன்புவைத்திருக்கமாட்டார்கள். பலதரம் அவரை முற்றிலும் மறந்தே இருக்கிறார்கள். ஆதலால் பொதுவாய் மனிதர் வாழ்நாளெல்லாம் பாவத்திற்கிடமேயன்றி வேறல்ல.

பிறரைத் தன்னைப்போல் எண்ணாததும் பாவமாம். அடுத்தாரைப் பகைப்பதும், இறுமாப்பாயிருப்பதும், பிறர் பொருளை விரும்புவதும் இவைகள் யாவும் பாவமே. மனதினால் செய்த பா

வங்கள் எத்தனையோ உண்டு, நாவினுல் செய்த பாவங்கள் எத்தனையோ உண்டு, கிரியையினுல் செய்த பாவங்கள் எத்தனையோ உண்டு, பரியாசம் கேலி முதலிய வீணுன வார்த்தைகள் ஒவ்வொன்றும் பாவமற்ற பரிசுத்த கடவுளுக்கு விரோதமான பகையாயிருக்கிறது. தலைமயிரை எண்ணினுலும் பாவத்தை எண்ண முடியாது.

இப்படிப்பட்ட அகோரமான பாவங்கள் எல்லாம் நீங்கும்படிக்கு நீங்கள் முக்கியமாய்த் தெரிந்துகொண்ட நாலு காரியங்களைப்பற்றிச் சில எடுத்துப்பேசுவேன்.

க-வது. திருநீறு. விருத்தாசலப் புராணத்தில்.

"நீறுபுனைவார்வினையை நீறுசெய்தலாலே
வீறுதனிநாமமது நீறெனவிளங்கும்
சீறுநரகத்துயிர் செலாவகைமருந்தாய்க்
கூறுடையதேவிகையில் முன்னிறைகொடுத்தார்"

என்றும் சொல்லியிருக்கிறதுண்டு. மாட்டுச் சாணத்தில் என்ன விசேஷமிருக்கிறதென்பது தெரியவில்லை. மாட்டின் சாணத்தினுல் பாவம் நீங்கிவிடுகிறதென்றுல், அதில் ஒரு விசேஷித்த மகிமை விளங்கவேண்டுமே. அப்படிக்கில்லாமல் சாதாரணமான குப்பைக்கொப்பான நீருகவேயிருக்கிறது; ஆதலின் உங்கள் முன்னே

ரில் ஒருவர்: "நீற்றைப் புனைந்தென்ன நீராடப் போயென்ன நீமனமே" என்கிறார்.

நீங்களும், உங்கள் பிள்ளைகளும் வழக்கமாய்த் திருநீற்றைப் பூசுகிறதினால் அதைப்பற்றிக் கவனியாமற்போகிறீர்கள். நீங்கள் நூதனமாய்ப் பூசிக்கொள்ளும்படி ஒருவன் உங்களுக்குச் சொன்னால் நீங்கள் அவனைப் பயித்தியகாரன் என்று சொல்வதற்குச் சந்தேகமில்லை.

மேலும், பாவத்தை நீக்குவதற்குத் திருநீறு னது கைகண்ட மருந்தாயிருக்குமேயானால், உடலிலுள்ள வியாதியைத் தீர்ப்பதற்குக் கடை மருந்து என்னத்துக்கு? காட்டுமூலிகை என்னத்துக்கு? மகா பாவங்களை நீக்கத்தக்க வல்லமை திருநீற்றுக்குண்டானால், தேகத்திலுள்ள பிணிகளைத் திருநீற்றால் நீக்கிவிடுவது லேசான காரியமல்லவா? அப்படிக்கிடமில்லாததினாலே கடை எங்கே, காடெங்கே என்று மருந்து தேடிப்போகிறீர்கள்.

திருநீற்றால் சிலவேளை வியாதி தீர்ந்ததுண்டென்பீர்கள். அது திருநீற்றாலேயே அல்ல, அதோடே சேர்ந்த மருந்தினாலேயே குணமாயிற்று.

அஞ்ஞான இராஜாக்கள் ஆளுகைசெய்தமுற் காலத்தில், கொலைசெய்த ஒருவனைக் குற்ற விசாரணைசெய்து தீர்ப்புக் கொடுக்கும்போது, நியாயாதிபதியானவன் அக்கொலைக்காரனைப் பார்த்து: உன் உள்ளங்கால்தொடுத்து உச்சந்தலைமட்டும் திருநீறு பூசிக்கொள்; உன்னை விடுதலையாக்குவேன் என்று சொல்வானேயானால், அந்த நியாயாதிபதியை உத்தமன் என்பார்களோ? சனங்கள் ஓடி இராஜனிடத்திற் பிரியாது செய்யார்களோ? இராஜன் நியாயாதிபதி செய்தது நியாயம் என்பானோ? அப்படியானால், பரிசுத்த கடவுள் அற்பச் சாம்பலாகிய திருநீற்றால் பாவங்களை நீறுக்கிவிடுவார் என்பதும் அபத்தமே.

நீங்கள் அநேகந்தரம் வழக்கமாய்ப் பூசிக்கொள்வதில் எத்தனையோ திருநீறாகிய தூள் தரையிலே சிந்திப்போகிறது. அப்படிச் சிந்திப்போகிறதினாலே ஊழி ஊழி காலம் நரகத்தில் அழுந்தவேண்டும் என்று ஒருவர் திருநீற்றை விசேஷிக்கிற வகையிற் சொல்லுகிறார்.

"ஒருகரத்தைநீட்டி விரல்மூன்றால்வாங்கி
ஒருவிரலால்தேய்த்திறுக்கி ஒளிவெண்ணீற்றை
பெருநிலத்தில் விழப்புனைவோர்இரவிசோமன்
பெருங்காலம் அருநரகில்பேராதாவார்"

என்பதே.

இதைப் பார்க்கும்போது திருநீற்ருல் நாகந் தான் கிடைக்கும் என்கிறதுபோல் இருக்கிற தே. ஏனென்ருல் திருநீற்றைச் சிந்தாத சிவபத் தர் உண்டா? திருநீற்றைப்பற்றிச் சொல்லப்படு கிற உபதேசம் அப்படி விபரீதமாயிருக்கிறது.

உ—வது. சிவஸ்தலங்களை விசேஷித்து அந் தந்த இடங்களுக்குப் போவதினுல் பாவநிவா ரண புண்ணியமுண்டாகுமென்று உங்கள் புரா ணங்களில் சொல்லியிருக்கிறபடி நீங்களும் அ தை அநுசரிக்கிறீர்கள்.

அறிவீனம் அதிகமாய் நிறைந்த முற்காலத் தில் அப்படித் தலங்களை விசேஷித்து எண்ணிப் போனதுபோல எக்காலத்திலும் எண்ணிப்போ கிறது யுக்தியல்ல. புண்ணிய ஸ்தலங்கள் என் னப்பட்ட அந்த இடங்கள் என்னத்தினுல் வி சேஷம் என்பதை உணர்ந்தறிய வேண்டாமா? அங்கேதான் தெய்வமிருக்கிறது, மற்ற இடங்க ளில் தெய்வம் இல்லையென்ரு? ஸ்தலங்களை விசேஷித்துப் போகிறவர்கள் தெய்வத்தை அறி யாதவர்களே.

தாயுமானவர் சொல்லியபடி.

"எங்கணுநீயென்ரு லிருந்தபடி எய்தாமல்
அங்குமிங்குமென்றலைய லாமோ பராபரமே."

தேவன் எங்கும் நிறைந்தவராய் இருப்பதால், அவ்விடங்களில் அலைகிறது அவபத்தியே, வீண் நடையே, மோசங்களுக்கு ஏதுவே.

தூலித்த தேகமுடையவர்கள் கால் நடையாய் வெகுதூரம் நடப்பதினால், அவர்கள் தேகத்திலுள்ள விஷநீர் வற்றிச் சிலவேளை சொற்ப சவுக்கியத்தைக் கொடுப்பதாலும், சுத்தமற்ற ஆகாயமுள்ள இடங்களில் இருப்பவர்கள் கடல் மலைக்குச் சமீபமான நல்ல ஆகாயங்களில் நடந்துபோய் வருவதாலும், ஒருவேளை சரீரத்துக்கடுத்த அற்பசவுக்கியம் கொஞ்சநாள் இருக்கலாம். ஆகையால் ஸ்தல விசேஷத்தினாலல்ல, இடப்பெயர்ச்சி ஆகாய வித்தியாசத்தாலேயே சுகம் உண்டாகும். காசி, காஞ்சிபுரம், ஸ்ரீரங்கம், இராமேசுரம், கன்னிமாகுமரி, திருச்செந்தூர் முதலிய இடங்களுக்குப் போவதினால் சில சமயத்திற் சரீரத்துக்கடுத்த சொற்ப குணமுண்டு. யூரோப்பியரும் அப்படிப் போகிறார்களே.

"காசிகாசியென்றுநீர் கால்கடுக்கஓடுநீர்
காசிஓடிஆடினுங் கறுப்புவெள்ளையாகுமோ?"

௩௩-வது. சிலவிடத்துத் தண்ணீரினால் பாவங்கள் போய்விடுமென்று உங்கள் புராணங்களில்

சொல்லியிருப்பதை நம்பி, அந்தப்படி விசுவாசித்து நடக்கிறீர்கள்.

தண்ணீரைக் கடவுள் என்று சொல்லலாமா? தண்ணீரானது தாகத்தை அடக்கவும், சமையல் செய்விக்கவும், தேக அழுக்கை நீக்கவும் தேவனால் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆற்றுத்தண்ணீர் பித்தம் போக்கும், ஊற்றுத்தண்ணீர் தாகம் போக்கும், குளத்துத்தண்ணீர் வாதம் போக்குமென்று இப்படிச் சிலவகையாய் நாட்டு வயித்தியமாரால் சொல்லிக்கொள்ளப்படுகிறபடி, தண்ணீரின் குணம் அவ்வளவே தவிர, பாவத்தை நீக்கத்தக்க சக்தி அதற்கில்லையே. "முக்காலுங் காகம் முழுகிக் குளித்தாலும் வெள்ளைக் கொக்காகுமோ?" என்பதுபோல, அசுத்தமான மனிதருடைய பாவம் பல தலங்களிலுள்ள தண்ணீரிற் குளிப்பதினால் ஒருபோதும் போகாது.

முன்னாளையிலிருந்த ஒரு பெரிய மனுஷன், தன் சீஷன் தூரத்திலுள்ள தீர்த்த ஸ்தானத்துக்குப்போய் தீர்த்தமாடி வரவேண்டுமென்று உத்தரவு கேட்க, அம்மனிதன் காரியத்தைச் சொல்லிக் கடத்தியும், சீஷன் ஒரே சாதனையாகப் போகத்தான் வேண்டுமென்று கேட்டுக்கொண்ட

போது, சிஷன் கையில் ஒரு கொம்மட்டிக்கா யைக் கொடுத்து, நீ விசுவாசத்தோடே ஸ்நா னம்பண்ணி, இந்தகொம்மட்டிக் காயையும் நன் ருய்க் கழுவிக்கொண்டுவா என்ருனும். அந்தப் படி சிஷன் போய்ச் செய்துவந்து, கொம்மட்டிக் காயைத் தன் குருவின் பாதத்திற் சந்தோஷ மாய் வைக்க, குரு அதை எடுத்து அறுத்து, சிஷனுக்குச் சாப்பிடக்கொடுக்க, அதிலுள்ள கசப்பு முன்போலவே அதிகக் கசப்பாயிருந் தது. அதினுல் சிஷன் உணர்வடைந்து, குரு வின் புத்தியை அங்கிகரித்துக்கொண்டானும்.

ஓ பிரியமுள்ளவர்களே! நீங்களும் அப்படி யே உணர்ந்து, பொய்யான காரியத்தை நம்பா தேயுங்கள்; அதில் பிரயோசனமில்லை.

அப்படியே அகப்பேய்ச்சித்தர்.

"தீர்த்தமாடினுலுமகப்பேய் தீவினைபோகாதே
ஊத்தைபோனுலுமகப்பேய் உள்வினைதீராதே,
ஆறுகண்டாயோவகப்பேய் அந்தவினைதீரத்
தேதித்தெளிவதெல்லாமகப்பேய் தீர்த்தமாமடியே"

என்று சொன்னதையும் உணர்ந்துகொள்ளுங் கள்.

சு—வது. நீங்களே புண்ணிய கிரியைகளைச் செய்கிறதினுல் பாவம் தீர்ந்து புண்ணியம் உண்

டாகுமென்று முக்கியமாய்ச் சொல்லிப் பிரயாசப்படுகிறீர்களே.

அழுக்கடைந்த கையையுடையவன் சுத்தமான பாத்திரத்தைத் தொட்டாலும் அப்பாத்திரமும் அழுக்காய்த்தானே போகும். அப்படியே பாவமுள்ள ஒரு மனிதன் புண்ணியம் என்று ஒன்றைச் செய்தாலும் அதிலும் பாவம் கலந்திருக்கும் என்பதற்குச் சந்தேகமில்லை. ஒருவன் புண்ணியம் செய்வதற்குப் போந்தவனாயிருந்தால், அவனுக்குள் பாவமில்லாதிருக்க வேண்டும். அப்படிப் பாவமில்லாத மனிதன் பூலோகத்தில் ஒருவனாகிலும் இல்லையே. பன்றியானது தன் அழுக்கை நீக்கத் தன்னால் கூடாததுபோல, மனிதனும் தன் பாவ அழுக்கைத் தன்னால் நீக்கிப் புண்ணியத்தை அடைந்துகொள்ளக் கூடாதவனாய் இருக்கிறான் என்று அறிவீர்களாக.

சிவாலயத்திற்கு ஒருவிசை விளக்கேற்றி வைப்பதினாலும், விபூதி இடுவதினாலும், காவடி சுமப்பதினாலும், அரிகண்டம் போடுவதினாலும், உருத்திராட்சம் அணிவதினாலும், அங்கப்பிரதட்சணம் வருவதினாலும், விரதங்களை அநுசரிப்பதினாலும், வனவாசம் செய்வதினாலும், தரு

மங்களைக் கொடுப்பதினாலும் பாவம் தீர்ந்து புண்ணியகதி அடையலாமென்றிருக்கிறது, துரும்பைத் தெப்பமாகப் பாவித்துச் சமுத்திரத்தைக்கடக்கத் துணிந்ததுபோலிருக்கிறது. அப்படிச்செய்வது சரியான காரியமல்ல; மோசத்துக்கு இடமேதவிர, பிரயோசனம் ஒன்றுமில்லை.

அப்படியே உங்களில் அறிவாளியா
யிருந்த ஒருவர்.

"நேமங்கனிட்டைகள் வேதங்களாகமநீதிநெறி
ஓமங்கடர்ப்பணஞ் சந்திசெபமந்திரயோகநிலை
நாமங்கள்சந்தனம் வெண்ணீறுபூசிநலமுடனே
சாமங்கடோறுமிவர் செய்யும்பூசைகள்சற்பனையே"

என்று பாடியிருக்கிறார்.

ஆகையால் பிரியமானவர்களே! நீங்கள் இவைகளில் ஒவ்வொன்றையும் திட்டமாய் ஆராய்ந்து, அவைகளில் பிரயோசனம் யாதுமில்லையென்று தள்ளிவிடுங்கள். அப்படிச் செய்வதே உங்களுக்கு மேன்மையாம்.

எழுபிறப்பு முதலிய பல பிறப்பாய் மனிதர் இறந்தபின் பிறப்பதினால் பாவங்குறைந்து கழிந்து, கடைசியாக முற்றிலும் அற்றுப்போம்;

புண்ணியம் உண்டாகி மோட்சம் கிடைக்குமென்று உங்களில் அநேகர் நம்புகிறார்கள்.

அது வீண்தோற்ற மயக்கமேயல்லாது நிசமல்ல. அசுத்த பிறப்பாய்ப் பிறப்பதினால் பரிசுத்தம் உண்டாகுமா? அழுக்குள்ள ஒருவனைச் சேறு நிறைந்த ஆயிரம் குளங்களில் ஸ்நானஞ் செய்வித்தால் பின்னும் அதிகமதிகமாய் அழுக்குத்தானே பற்றும், சுத்தியாவானா? அதுபோல ஒரு ஆத்துமாவானது மிருகப்பிறப்பாய், அல்லது வேறுவகைப் பிறப்பாய்ப் பிறந்தால் அதிக கெட்டகுணமும் ஆகாத செய்கையும் அதிகமதிகமாவதேயன்றி, பாவம் நீங்கிப் பரிசுத்தமுண்டாகுமா?

உங்கள் ஞானிகளில் அநேகரும் மறுபிறப்பென்பது வீணேயென்று பாடிக் காட்டியிருக்கிறார்கள். ஆகையால் இப்போது அவைகள் எல்லாவற்றையும் எடுத்துக் காட்டாமல் நிறுத்தி, அறியவேண்டிய விசேஷித்த காரியத்தைப்பற்றி அறிவிக்கிறேன் கவனிப்பீர்களாக.

## மூன்றாவது.

### கிறிஸ்துமார்க்கத்திற் சொல்லப்படுகிற பாவ நிவாரணரான இயேசு இரட்சகனைப் பற்றிக் கவனிப்போம்.

அவர் நல்லவர், வல்லவர், தேவாதி தேவன் தேவகுமாரன், எல்லாவற்றையும் உண்டாக்கினவர். முதலிலே காட்டியபடி பூலோகத்துக்கென்று வந்த சற்குரு அவரே. அவருக்கு இயேசுகிறிஸ்துவென்பது பேர். இயேசு என்றால் இரட்சிக்கிறவர் என்று அர்த்தம்; கிறிஸ்துவென்றால் சத்தியத்தைப் போதிக்கிற குருவும், பாவத்தைத் தீர்க்கிற ஆசாரியனும், சர்வத்தையும் ஆண்டு காக்கிற இராஜனுமாயிருக்கிறவர் என்று தாற்பரியமாம். அவர் ௲௮ᴧ சொச்ச வருஷங்களுக்கு முன்னே இப்பூலோகத்தின் நடு மண்டலமாகிய கானான்தேசத்தில் ஒரு பரிசுத்த கன்னியிடத்தில் மனு உருவாய் வந்து தோன்றி

ணர். ௩௩ வருஷம் பூமியில் தங்கித் தாபரித்தார்; அநேக நன்மைகளைச் செய்தார்; அநேக அற்புதங்களைச் செய்தார்; பசித்தோர் முகம் பார்த்தார்; ஏழைகளுக்கு இரங்கினர்; நல்லுபதேசம்பண்ணி, தாமே இரட்சகரென்று யாவரும் அறிந்து போற்ற அமிர்தமொழிகளைச் சொன்னர். கடைசியாகத் தமது இஷ்டப்படி சிலருக்குத் தம்மை ஒப்புக்கொடுத்து, அகோரமான பாடுபட்டு, சிலுவையில் ஆணிகளால் அறையுண்டு, திரு இரத்தஞ்சிந்திச் சீவனை விட்டார். அவர் அடக்கம்பண்ணப்பட்டு, மூன்றும் நாள் உயிர்த்தெழுந்து, தமது பத்தர்களுக்குக் காட்சிகொடுத்து, நாற்பதுநாள் புவியில் சஞ்சரித்து, தம்மை விசுவாசித்தவர்கள் பாவநிவிர்த்தி அடைவார்களென்றும், புண்ணியத்தைப் பெற்றுக்கொள்ளுவார்களென்றும், இது விசேஷத்தைக்கூறி அறிவிக்கத் தமது சீஷர்களுக்குக் கட்டளைகொடுத்து, மேகவாகனமேறி, மோட்சலோகத்திற் போயிருக்கிறர். அந்தா வானத்தில் செந்தாமரைப் பூத்ததுபோல, உங்களிலுள்ள ஞானிகளில் ஒருவர் மேற்சொன்னதற்கு இசைவாக:

"வணங்குவாய்ச் சகசோதி யொருவனாகி
மாநிலத்தை யொருநொடியில் வகுத்தேமண்ணில்
குணமான மனிதரையும் படைத்தபின்பு
குவலயத்திற் றானுதித்துக் குருவாய்வந்து
சனமான சமுசார மொன்றில்லாமல்
சந்நாசி போலிருந்து தவத்தைக்காட்டி
அன்பான சித்தர்களை யிருத்திப்பின்பு
அகண்டதலஞ் சென்றவரை யண்டுவாயே"

என்று அறிவிக்கிறார்.

சிநேகிதர்களே! அவரை நம்புங்கள்; அவரை விசுவாசக் கண்ணால் உங்கள் புண்ணிய நாதரென்று நோக்குங்கள்.

"அன்பைப் பெருக்கி நமதாருயிரைக் காக்கவந்த
இன்பப் பெருக்கே இறையே பராபரமே".

என்று சொல்லியபடி, நீங்களும் சொல்லி அவர் பாதம் சரணமே கதியென்று அன்புகூர்ந்து நாடுங்கள். ஏனென்றால் நமது நிமித்தமே பாடுபடச் சம்மதித்து வந்தார்; அவரில் யாதொரு குற்றமும் கண்டுபிடிக்கக்கூடாது. அவர் வையப்பட்டபொழுதும், அடிக்கப்பட்டபொழுதும் பொறுமையாயிருந்தார். சத்துருக்களானவர்களுக்குத் தேவன் மன்னிக்கும்படிக்கு வேண்டிக்கொண்டார்.

இரத்தம் சிந்துதலில்லாமல் பாவமன்னிப்பில்லையென்று சத்தியவேதம் சொல்லியபடி நமக்காகவே அவர் இரத்தம் சிந்தினர். நம்முடையமேல் வரவேண்டிய ஆக்கினையை அவர் அடைந்தார். உலகத்திலுள்ள எல்லாரும் நித்திய மாணவேதனையை அநுபவிக்கவேண்டியதற்குப் பதிலாக அவர் மரணமடைந்தார். அவருடைய பாடு மரணம் இவைகளினுல் அளவில்லாத புண்ணியங்களைச் சம்பாதித்திருக்கிருர். உங்கள் பாவங்களை அறிக்கையிட்டு அவரிடத்தில் மன்ருடிக்கொள்ளுங்கள். அப்போது உங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டுப் புண்ணியவான்களாவீர்கள்.

"சாகாமற் செத்திருக்கச் சற்குருவின் சந்நிதிக்கு
வேகாமல் வெந்துவிட வேண்டாமோ?—ஏகாந்த
மண்டபத்தி னுட்புகுந்து மறைஞான தற்பொருளை
கண்டிடத்தே கண்டிருப்பாய் காண்"

என்று ஒருவர் சொல்லியபடி, பரலோகத்தில் சரீரப்பிரகாரமாகவும், மற்ற எங்கும் தெய்வீகப்பிரகாரமாகவும் வாசம்பண்ணுகிற மறைஞான தற்பொருளாகிய இயேசுவென்னும் சற்குருவின் புண்ணியம் உங்கள் இருதயத்தில் உண்டாகி, நீங்கள் சமாதான சந்தோஷமுடை

யவர்களாவதற்குப் பாவவெறுப்பையும், விசுவாசத்தையும், தாழ்மையான மன்றாட்டையுமே கருவியாகப் பிரயோகிக்கப் பாருங்கள்.

எந்த மார்க்கத்திலிருந்தாலும், சிவமார்க்கத்திலிருந்தாலும் சட்டத்தின்படி நடந்தால் முத்தி கிடைக்குமென்று சொல்லாதேயுங்கள். இயேசுகிறிஸ்துவினாலே அல்லாமல் வேறொருவராலும் இரட்சிப்பு கிடையாது. "அணைகடந்த வெள்ளம் அழுதாலும் வராது." இப்பொழுதே தகுதியானகாலம், இப்பொழுதே இரட்சணிய நாள், பின்புத்தியாயிராதேயுங்கள். எங்களுக்கு உண்மை தெரியாமற்போச்சுதேயென்று கடைசிநாளில்சொல்லித் தியங்காதபடி முந்திக்கொள்ளுங்கள். வேதத்தையும், வேதபோதகக் குருமாரையும் விசாரியுங்கள். இயேசு இரட்சகர் உங்களைக் கிருபையாய்க் கண்ணோக்கக்கடவர்.—ஆமென்.